2021 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய கோரிக்கையை, எண்ணத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் நிறைவேற்றி வருகிறார்கள். வேளாண்மைக்கு என்று தனி நிதிநிலை அளிக்க வேண்டுமென்பது விவசாயிகளின் நீண்ட நாள் கனவு. அதை நிறைவேற்றியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய தாக்கம், எல்லா விஷயங்களிலும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை, விதிகளுக்கு உட்பட்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கேட்பதைக் கொடுப்பவர் இருக்கின்றார். நிச்சயமாக அதைக் கொடுப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

வீட்டுமனைப் பட்டா

***409—திரு. கே.பி. சங்கர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டு, வள்ளுவர் நகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் வட்டம், வள்ளுவர் நகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் பகுதியானது கத்திவாக்கம் கிராமக் கணக்கில், புல எண்கள் 26, 27, 29 A, 240. மொத்த விஸ்தீரணம் 8.67.0 எக்டேர் ஆகும். இந்த இடம் கிராமக் கணக்கு வகைப்பாடுகளில் இரயில்வே நிலம் என தாக்கல் ஆகியுள்ளது. மேற்படி புலங்கள் இரயில்வே துறைக்குச் சொந்தமானது என்பதால், இரயில்வே துறை இசைவு வழங்கும்பட்சத்தில், பட்டா கோரும் கோரிக்கை தொடர்பான மேல் நடவடிக்கை தொடரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 40, 50 ஆண்டுக்காலமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற அந்த மக்களுக்கு இது ஒரு வாழ்வாதாரப் பிரச்சினை. இப்போதெல்லாம் இரயில்வே துறை நிலங்களை விற்பதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, அரசே இதை முன்னெடுப்பு செய்து, நடவடிக்கை எடுத்து, அந்த வகையிலாவது, அந்த நிலங்களை வாங்கி அவர்களுக்குப் பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பட்டா வழங்க வேண்டுமென்று கேட்கிறீர்கள் அவ்வளவுதானே? மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வே துறைக்குச் சொந்தமான நிலமாக இருக்கின்ற காரணத்தினால், நாம் உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு வசதியில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, யோசனையை ஏற்று, இரயில்வே துறையிடம் பேசி, அதை முடிவுக்குக் கொண்டு வர முடியுமா என யோசித்து மேல் நடவடிக்கை எடுக்கிறோம்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*